நாகப்பட்டினம் மாவட்ட அளவிலான திறன் போட்டிகள் - டிசம்பர் 2019 –

நடைபெறுவது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்

திரு.பிரவின் பி.நாயர், இ.ஆ.ப.,

அவர்கள் வெளியிடும் செய்தி குறிப்பு

## சர்வதேசத் திறன் போட்டிக்கான அழைப்பு

சீனாவில் உள்ள ஷாங்காய் நகரில் 2021 செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள சர்வதேசத் திறன் போட்டியில் பங்கேற்க ஏதுவாக தொடக்க நிலையில் நடைபெறவுள்ள மாவட்ட அளவிலான திறன் போட்டிகளில் பங்கேற்க https://worldskillsindia.co.in/worldskill/world/ என்ற இணையதளத்தில் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க அழைக்கப்படுகிறார்கள்.

6 துறைகளில் உள்ள 47 தொழிற் பிரிவுகளில் தங்களது தனித்திறனை வெளிப்படுத்தும் விதமாக நடைபெற உள்ள மாவட்ட அளவிலான திறன் போட்டிகளுக்கு விண்ணப்பிக்க **கடைசி நாள் 25.11.2019. வயது வரம்பு : 1.1.1999 அன்றும்**, அதற்குப் பிறகும் பிறந்திருக்க வேண்டும். குறிப்பிட்ட சில தொழிற் பிரிவுகளுக்கு **1.1.1996 அன்றும்**, அதற்குப் பிறகும் பிறந்தவர்கள் தகுதியுடையவர்களாவர்.

ஐந்தாம் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு வரைக் கல்வித் தகுதி பெற்றவர்கள் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு படித்தவர்கள் மற்றும் படித்து கொண்டிருப்பவர்கள், தொழிற் பயிற்சி நிலையம், தொழிற் நுட்ப கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரியில் படித்தவர்கள் மற்றும் படித்துக் கொண்டிருப்பவர்கள், தொழிற் சாலையில் பணியில் உள்ளவர்கள், குறுகிய கால தொழிற் பயிற்சி பெற்றவர்கள் (PMKVY) ஆகிய அனைவரும் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்.

மேலும் விபரங்களை மேற்கண்ட இணையதளத்தின் மூலம் அறிந்துக் கொள்ளலாம்.

தொடர்புக்கு : மாவட்ட திறன் பயிற்சி அலுவலர்,

மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம்,

நாகப்பட்டினம் மாவட்டம்

பெயர் : சு.செந்தில்குமாரி, உதவி இயக்குநர்

தொலைபேசி எண் : 04365 250126

25/10/19.

உதவி இயக்குநர்
மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம்
நாகப்பட்டினம்

25/10/19

செய்தி மற்றும் மக்கள்
தொடர்பு அலுவலர்,
நாகப்பட்டினம்

30/10

மாவட்ட ஆட்சியர்
நாகப்பட்டினம்